ஜம் ஜம் பீடா
நறுமணம் கமழும் இனிப்பு பீடா
மசாலா கொண்டு உங்கள்
பீடாவைத் தயாரியுங்கள்.
விலை பவுண்டு 1-க்கு ரூ 2
தயாரிப்பவர்:
C. M. ஷாபீஸ் சாயபு
106, மெயின் பஜார் ஊட்டி.

இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A. (U. S. A.) "விஷாரத்"
தாராபுரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல்—மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

பிறகு என்ற பேச்சே வேண்டாம்!
ஏன் யோசிக்க வேண்டும்?
ஆர் அட்டி சொல்வார்கள்?
இன்றே
பி. ஏ. ஆர். & பிரதர்
சுவர்ண மாளிகைக்குச்
செல்வோம்!

இடி 3 | தமிழ் வாரச் செய்தித் தாள் | ஒலி 1
12—1—53 திங்கட்கிழமை

குன்னூர் முனிசிபாலிடியின் ஊழல்

ஸ்ரீ வர்க்கீசின் எதேச்சாதிகாரம்!

குன்னூர் முனிசிபாலிடியின் நிர்வாகம் ஊழல் மலிந்திருப்பதாகக் குன்னூர்வாசிகள் பேசிக்கொள்ளுகின்றனர். இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களுக்குள் அபிப்பிராயபேதம் நிறைந்திருப்பதாகவும் அதனால் நகர நிர்வாகம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. முனிசபல் சேர்மன் ஸ்ரீ K. I. வர்கீசுக்கு பொதுமக்கள் ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. அதிர்ஷ்டவசமாக குலுக்கு சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தற்பொழுது ந. ம. கூட்டணிக்கு ஸ்ரீ K. I. வாகீஸ் தலைமை வகிக்கிறார். ஆனால் இவருடைய தலைமை நகர ஐக்கியத்தையே குலைக்கிறது என்று தெரிகிறது. சென்ற சில தினங்களுக்கு முன்பு நாம் குன்னூர் சென்றிருந்தபொழுது முனிசிபல் கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தோம். அப்பொழுது சில பிரச்சனைகள் பேரில் விவாதம் நடந்து வந்தது. சேர்மன் ஸ்ரீ வர்க்கிஸ் பிடிவாதமாகவும் நேர்மையற்ற முறையில் துடுக்குத்தனமாக கவுன்சிலர்களின் உரிமையைப் பறிக்கும் முறையில் நடந்து கொண்டதைப் பார்த்து வருத்தப்பட்டோம். நகர மக்களின் நலனைத்தான் சேர்மன் கவனிக்கவேண்டுமேயன்றி கட்சி வேற்றுமையோ, தனக்கு வேண்டாதவர்களையோ கவுன்சிலில் உதாசீனம் செய்வது ஜனநாயக முறைக்குப் புறம்பானது.

முனிசிபாலிடிக்கு சேர்மன் அவர்கள் கொடுக்கப்பட்ட ரூ. 37—8—0 செக் செல்லுயடியாகாமல் (Dishonour) போனது பற்றி கவுன்சிலில் வாதம் நடைபெற்றது, நகரத்திற்கு தந்தையாக இருக்கக்கூடிய ஒரு சேர்மனின் 'செக்' டிஸ்ஹானர் ஆவது அவருடைய பொறுப்பும் நாணயமும் எத்தன்மையுடையது என்பது நன்கு புலனாகிறது. மற்றும் சில விஷயமறிந்த வட்டாரங்களில் விசாரித்தபொழுது சேர்மன் வர்க்கிஸ் கோ-ஆபரேடிவ் ஸ்தாபனத்திலும் சில ஊழல்கள் செய்திருப்பதாகவும் அதுபற்றி கோர்ட்டில் கேஸ் நடைபெற்று வருவதாகவும் அறிகிறோம். ஜனப் ஹிப்பு சேட் அவர்களின் தோட்டத்தில் குடியிருக்கும் ஒரு விதவைக்கு ஸ்ரீ வர்கிஸ் ரூ. 50 கொடுக்க வேண்டுமாம். அந்த அம்மையார் கண்ணீர் வடித்துப் புலம்பிக் கொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டோம்,

நகரசபை சேர்மன் பதவி மிகவும் பொறுப்பானது. இப்பதவி மிகவும் பொறுப்பானவர்கள்தான் வகிக்கவேண்டும். ஜனநாயகத்தின்படி எவர் வேண்டுமானாலும் சேர்மனாக வரமுடியும் என்றாலும் காந்திஜி சொல்லியபடி ஒரு 'கிளிக்' ஆட்சி செய்ய இடம் தரக்கூடாது. அத்தகைய ஆட்சியின் ஊழல்களை அடிக்கடி அம்பலப்படுத்தி நமது மக்கள் சர்க்காருக்குத் தெரிவித்தால் நிச்சயமாக நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம்.

நாம் அறிந்தவரையில் தற்பொழுதுள்ள முனிசிபல் நிர்வாகம் மிகவும் ஊழல் மயமானது. அரசாங்கம் சிஐடிகளை நியமித்து என்ன நடைபெறுகிறது என்பதைத் தெரிந்து ஆட்சியின் போக்குத் தவறாகத் தெரிந்தால் உடனே முனிசிபாலிடியை கலைத்து மறுதேர்தல் நடத்த வேண்டுகிறோம்.

ஸ்ரீ சுப்பராயக் கவுண்டருக்கு கோவிந்தா!

தீர்ப்பை மக்கள் பாராட்டுகின்றனர்!

காங்கயம் தொகுதியில் சென்னை சட்டசபைத் தேர்தலில் ஸ்ரீ சுப்பராயக் கவுண்டர் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது செல்லுபடியாகாது என்று எலக்ஷன் நீதிபதிகள் தீர்ப்பளித்தது குறித்து காங்கயம் தொகுதி மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். "சுப்பராயக் கவுண்டருக்கு கோவிந்தா" என்ற கோஷம் தீர்ப்பளிக்கப்பட்ட மறுநாளே தாராபுரம் தாலூகா முழுதும் சங்கநாதம்போல் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. பாரத நாட்டில் நீதியும் நேர்மையும் நீதிபதிகளிடம் நிறம்ப இருக்கிறது என்பது நிதர்சனமாகிவிட்டது. இந்த அருமையான தீர்ப்பளித்த நீதிபதிகளுக்கு நமது வாழ்த்தும் வணக்கமும் உரியதாகுக!

புதிய கவுன்சிலர்கள் (தாராபுரம்)



ஸ்ரீ கோதண்ட ராமசாமி

புதிதாக இந்த வருடம்தான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் இளைஞர். படித்தவர். பொறுமையுடையவர். செல்வந்தர். சோளக்கடை வர்த்தகரின் பேராதரவு இருந்ததால் சுலபமாக வெற்றி பெற்றார். அதிர்ஷ்டசாலியும்கூட! வைஸ்சேர்மன் பதவியும் கிடைத்துவிட்டது.

ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர்

இவருடைய இயற்பெயர் இது ஆனால் துரைசாமி அய்யர் என்று சொன்னால்தான் எல்லோருக்கும் தெரியும். இவருடைய நண்பர்கள் 'துரை' 'துரை' என்று அன்பாக அழைப்பார்கள். சுயமுயற்சியால் பிரமுகரானவர். நல்ல மூளையுடையவர். இந்தக் கவுன்சிலுக்கு இவருடைய ஆலோசனை மிகவும் பயன்படும். முன்பு ஒருமுறை கவுன்சிலராகப் பணியாற்றி இருக்கிறார்.



ஸ்ரீ ராஜு

ரிஸர்வ் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கவுன்சிலர். உழைப்பாளித் தோழர்! கட்சிப் பிடிப்போடு பணியாற்றினால் நல்ல எதிர்காலம் இவருக்கு உண்டு.





ஸ்ரீ சுப்ரமணியம்

பரம்பரை விவசாய குடும்பத்தில் பிறந்தவர். விவசாயியாகவே வாழ்ந்து வருகிறவர். மக்களின் பேராதரவாலே வெற்றி பெற்றவர். இளைஞர், நேர்மையானவர்.

குயில் மார்க் பீடி.

எங்கும் புகழ் பெற்றது

காரம் மணம் குணம் பெற்றது

பீடிகளில் சிறந்தது

நகைக் கலைக் கோயில்

நாகரீக தினுசுகள்

நாணயமே குறிக்கோள்

எல்லாவிதமான தங்க ஆபரணங்கள் கிடைக்கும்

ராமு அண் கோ

ஜிவல்லர்ஸ்

கோயமித்தூர்.

ஜனாப் அப்துல்சலாம்



போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேட்சை கவுன்சிலர். பிரபலகாண்ட்ருக்டராக இருந்தவர். தாராள சிந்தையுடையவர். முயற்சியால் முன்னுக்கு வந்தவர் திறமைசாலி!

ஸ்ரீ வெங்கட்ட நாராயண செட்டியார்.



இவர் பரம்பரை கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவர் உயர்ந்த பண்புடையவர். ஆட்சிமுறை தெரிந்தவர். பொறுப்புடையவர் தென்னாடெங்கும் வர்த்தகத் துறையில் புகழ் பெற்றவர். தாராள சிந்தையுடையவர். போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கவுன்சிலர்.

அறிமுகப்படுத்துகிறோம்!



அலங்கயம்

திரு. ஸ்ரீரங்ககண்டர்

இது இவருடைய இயற்பெயர். அலங்கயம் மைனர் என்று அன்பாக அழைக்கப்படுபவர். தாராள சிந்தையுடையவர். ஏழை மக்களின் இசயமறிந்த நடப்பவர். தமிழறிவும் உலகானுபவமும் பெற்றவர். அறிஞர்களை ஆதரிக்கும் இயல்புடையவர். அலங்கயத்தில் நடைபெறும் பொதுக் காரியங்களில் இவருடைய பெயர்தான் முதன்மை ஸ்தானத்தில் நிற்கும். ஜாதி வேற்றுமை பாராது இவருக்கென அமைந்த இயற்கையான பெருங்குணத்தோடு நடப்பவர். அலங்கயம் ஆற்றிற்குப் பாலம் வேண்டும் என்று பல்லாண்டுகளாக விரும்பி வருபவர். இவரது வேண்டுகோளை மக்கள் சர்க்கார் பூர்த்தி செய்தால் அலங்கயம் எதிர்காலத்தில் செழிப்புறும்!

தளவாய்பட்டணம்

ஸ்ரீ ரங்கராமாநுஜ ரெட்டியார்.



இளைஞர். படித்தவர் பொதுப்பணி ஆற்றவேண்டும் என்ற பேரார்வமுடையவர். பரம்பரை விவசாய குடும்பத்தில் தோன்றியவர் பெரிய நிலச்சுவான்தாரர். கல்விக் கழகங்களுக்கு பெருநிதியளித்தவர். தாராபுரம் செயிண்ட் அலாசியஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும், தாராபுரம் போர்டு ஹைஸ்கூலின் முன்னேற்றத்திற்கு காலமறிந்து உதவி செய்திருக்கிறார்.

அடுத்த நமது 'இடி' இதழில் இவர் விவசாய முன்னேற்றங்கருதி விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்வதெப்படி என்பதையும் அதனால் விளையும் நன்மைகளைபற்றியும் விரிவாக ஒரு கட்டுரை எழுதுகிறார்.

ஜி. டி. நாயுடு!



அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுப் பண்டை மருத்துவ நூல்கள் அனைத்தும் சேகரித்து அவைகளை ஆராய்ச்சி செய்து வருகிறார். மேல் நாட்டு முறையில் தமிழ் நாட்டுப் பண்டைய மருந்துகளைத் தயாரித்து உலகெங்கும் அனுப்ப ஏற்பாடு செய்து வருகிறார். கவிஞர் பாரதியார் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரத்தை தமிழில் பெயர்த்தல்வேண்டும் என்றார். ஆனால் அறிஞர் நாயுடு அவர்கள் தமிழ்நாட்டு முறைகளை உலகெங்கும் பரப்ப முயற்சிக்கிறார். அறிஞர் நாயுடு அவர்கள் தமிழ் இலக்கியத்தில் உயிருள்ளது மருத்துவ நூற்கள் ஒன்றே என்ற நம்பிக்கையுடையவர். அவைகளை இக்காலத்திற்கேற்ற முறையில் தயாரித்து உலகெங்கும் உள்ள மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயங்களை அறிந்து வருகிறார். தமிழனின் புகழ் தரணி முழுதும் பரவ நாயுடு முயற்சிக்கிறார் என்றால் நமக்கெல்லாம் பெருமையல்லவா? யந்திர ஆராய்சி! விவசாய ஆராய்சி! ஆகிய பல்கலைகளில் பல புதுமைகளைக் கண்டுபிடித்த நாயுடு அவர்கள் மருத்துவத் துறையிலும் வெற்றியடைவது உறுதி! மக்கள் ஆதரவு நாயுடு அவர்களுக்கு உண்டு. ஆனால் மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே அதன் ஆதரவு இருக்கிறதா என்பதுதான்........ எனினும் கால வெள்ளம் காட்டாறு போன்றது அந்த சக்தியை எந்த அணையும் தடுக்க முடியாது. அதுபோல் நாயுடுவின் முயற்சி வெற்றியடைந்தே தீரும். வாழ்க நாயுடு! வாழ்க அவரது முயற்சிகள்!

மைசூரிலே!

1) மதுவும் மாதும் நிறைய உண்டு
2) அரிசி விலை அதிகம்
3) பிருமணாள் ஹோட்டலில் ஒரு சாப்பாடு விலை ரூ. 1—8—0
4) போலீஸ் கடுபிடி இல்லை
5) புராதன கலைகளைப் பாதுகாப்பதற்கு நிரந்தரமாக வேலை பார்க்கும் சிப்பந்திகள் அநேகர்
6) சித்திரக் கண்காட்சிசாலையில் நமது ஜில்லாப் பிரமுகர் காலஞ்சென்ற பழையகோட்டைப் பட்டக்காரர் திரு. நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் நிழலுருவப் படம் ஒன்று இருக்கிறது
7) மைசூர் ஸ்டேட் ஜனத்தொகையில் நூற்றுக்கு 25-முஸ்லிம்கள் இருக்கின்றனர்
தற்பொழுது தமிழர்கள் அதிகம் குடியேறி வருகின்றனர்
8) 'நவஜோதி' சினிமா ஸ்டுடியோ ஒன்று இருக்கிறது. ஆனால் அது ஜோதியிழந்து இருக்கிறது. அங்கே தமிழ் படம் (நண்பன்) தயாராகி வருகிறது
9) பீடி சுற்றும் தொழிலாளி அதிகம்
10) அநாதைச் சிறுமி சிறுவர்களுக்குக் கல்வி, உடை, உணவு தரும் விடுதி இருக்கிறது. அதை முஸ்லிம்கள் நடத்தி வருகின்றனர்
11) பிராமணர், பிராமணரல்லாதார் போராட்டம் வலுத்து வருகிறது
12) பொதுமக்கள் மைசூர் ஸ்டேட் இந்திய யூனியனோடு இணைவதற்கு முன்னர் இருந்த சுபீட்சம் இப்பொழுதில்லை என்று பேசிக்கொள்ளுகின்றனர்.

தோழர்களே !

வணக்கம்

இடியின் மூன்றுவதாண்டு

முதல் இதழை சமர்ப்பிக்கிறேன். 'இடி'யை ஒழித்துவிடலாம் என்று கங்கணம் கட்டித் திரிந்தோர்க்கும், இடியின் வளர்ச்சி கருதி ஆதரித்த பொதுமக்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக் கூறுகிறேன்.

தங்கள் ஊழியன்

பண்டிட் ஜெயிலானி

ஆசிரியர் 'இடி'



வெளிவரப் போகிறது!

குன்னூரில் போதைதரும் எஸன்ஸ் வியாபாரிகள் யார்! யார்!! கள்ளத்தனமாக எப்படி வியாபாரம் செய்கின்றனர். அவர்கள் சாயம் வெளுக்கப்போகிறது !

தாராபுரம் புதுப்பணக்கார கவுன்சிலர் மணி அய்யர் தேர்தலில் எப்படி வெற்றி பெற்றார் என்ற விடரம் வெளிவரப்போகிறது.

ஆல் இந்தியா ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:—பம்பாய்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	1,25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்		31,25,000
மொத்த ஆஸ்திகள் (Exceed)	ரூ.	1,04,35,000

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்

முதலிய சகல இன்ஷ்யூரன்ஸ்களும் வழங்குகிறோம்.

விவரங்களுக்கு:—

தென்னிந்திய டிவிஷனல் ஆபீஸ்:—
"ஆல் இந்தியா ஜெனரல் பில்டிங்"
கோயமுத்தூர்.

P. V. K. ஷண்முகம், B. A.
டிவிஷனல் மானேஜர்,

சென்னை ஆபீஸ்:— 29, லிங்கி செட்டி தெரு, சென்னை.

ஆசிரியர், வெளியிடுபவர்:— பண்டிட் ஜெயிலானி விஷாரத், தாராபுரம். அச்சிட்டது:— ராயல் பிரஸ் கோயமுத்தூர்.